# இலங்கையில் காழி நீதிமன்ற முகாமைத்துவம் : சம்மாந்துறை காழி நீதிமன்ற நிலை பற்றிய ஆய்வு

A.R.F. Rakeeza[1] & M.I.M. Jazeel[2]

[1,2]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
rakeezriraza@gmail.com, jazeelmi@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டமரபு காழி நீதி மன்றத்தை தோற்றுவித்தது. இதற்கமைய நிறுவப்பட்ட ஆரம்ப கால நீதிமன்றங்களில் ஒன்றான சம்மாந்துறை காழி நீதிமன்றத்தின் முகாமைத்துவம், ஒழுங்கமைப்பு என்பனவற்றைப் பரிசீலிப்பதனை இவ்வாய்வுக் கட்டுரை நோக்காகக் கொண்டுள்ளது. நேர்காணல் அவதானம் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு இந்நீதிமன்றத்தின் ஆவணங்களின் மீளாய்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இவ் ஆய்வு பண்பு ரீதியானதாகும். முஸ்லிம் பாரம்பரிய கிராமம் ஒன்றின் இஸ்லாமிய நீதிப் பரிபாலனத்திற்கான ஒழுங்கு முறைகளையும், முகாமைத்துவத்தையும், அடிப்படையான வளங்களையும் சம்மாந்துறை காழி நீதிமன்றம் கொண்டமைந்து தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆயினும் அதன் செயற்திறனை மேம்படுத்துவதற்கான சீராக்கமும் புத்தாக்கமும் தேவைப்படுகின்றது. அதற்கான விதந்துரைகளுக்கு வழிகாட்டியாக இவ் ஆய்வு அமைந்துவிடவல்லது.

**திறவுச்சொல்:** காழி நீதிமன்றம், நீதி பரிபாலனம், சம்மாந்துறை, காழி நீதிமன்ற முகாமைத்துவம்

## அறிமுகம்:

மனித வரலாற்றில் நீதி பெறுமானம் மிக்க உயர் பண்பாகும். (Jazeel and Fowzul, 2014) இஸ்லாாம் அழுத்திக்கூறும் விடயங்களில் மிக முக்கிய இடத்தினை அது வகிக்கின்றது. “நீதி செலுத்துங்கள் அது இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும்”(05:08) அத்தகைய நீதி மக்கள் மத்தியில் நிலை நாட்டப்படுவதன் அவசியம் குறித்து அல-குர்ஆனும் அல்-ஸுன்னாவும் அழுத்திக் கூறுவதனை அவதானிக்கலாம். நீதி செலுத்துவது தெய்வீகக் கட்டளை என்பதை திருமறை விளக்குகின்றது. அத்தியாயம் அந்-நிஸா வசனம் 135 நீதி தொடர்பில் அல்-குர்ஆன் பிரஸ்தாபிக்கும் மிகச்சிறந்த தொடரெனலாம் (Cair, 2014).

இறைதூதர் (ஸல்) அவர்களது வாழ்வியல் வழிகாட்டல்களில் இருந்து முறையான நீதிப்பரிபாலனம் ஒன்றைத் தாபிப்பதற்கான கூறுகளையும் படிமுறைகளையும் மற்றும் ஸஹாபாக்களது நடைமுறைகளில் நீதியின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகளையும் அடையாளப்படுத்த முடியும். உமர் இப்னு ஹத்தாப் (றழி) அவர்கள் அபூ மூஸா அல்-அஸ்அரிக்கு வழங்கிய நீதித்துறை வழிகாட்டலும் (இப்னுல் காஸ், 2007) அலி (ரலி) அவர்களின் கடிதமும் நீதித்துறை தொடர்பான முன்னோடி ஆவணங்களாக கொள்ளப்படுகின்றன.

வரலாற்றின் முன்னோடிக் காலப்பகுதியில் நீதித்துறை மற்றும் அதன் ஒழுங்குகள் தொடர்பான இலக்கியங்கள், காழிகள் தொடர்பான எழுத்தாவணங்கள் போன்றவற்றை வரலாற்றுமூலங்கள் வாயிலாக அறியலாம்.( Jazeel andFowzul,2014) எனவே இவ்வாறானதொரு பாரம்பரியத்தின் அடிப்படையில் முஸ்லிம்கள் தாம் எங்கு சென்ற போதிலும் தமக்கான தனித்துவமான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும் வழக்கத்தினைக் கொண்டிருந்தனர்(ஸுக்ரி, 1986).

இலங்கையின் சட்ட முறைமையை எடுத்து நோக்கின் அது பல சட்டக் கூறுகளைக் கொண்ட ஒரு கலவையாகக் (Mixture of many elements) காணப்படுவதனை அவதானிக்கலாம். பேராசிரியர் வீரமந்திரி அவர்கள் இலங்கையின் சட்ட முறைமையை வர்ணிக்கையில் அது ஒரு அழகான பல வண்ண சித்திரம் என்று கூறுகின்றார். (வீரமந்திரி, 2004) எனவே, இலங்கையின் இன,மத பல்வகைமைக்கேற்ப்ப சட்டப் பல்வகைமையும் அமைந்திருந்தது என்பது இதன் மூலம் புலனாகின்றது.

இலங்கையில் வதியும் முஸ்லிம்களது இருப்பு இற்றைக்கு 1000 வருடங்களுக்கு முன்பிருந்து ஆரம்பமானது (ஸுக்ரி, 1986). அவர்கள் “ஷரீஆ இஸ்லாமிய்யா” எனப்படும் இஸ்லாமிய சட்டவியலை தமது அன்றாடவாழ்வியல் நடவடிக்கைகளின் போது பிரயோகிக்கின்றனர். இதனால் அவர்கள் தனித்துவப்படுத்தப்படுகின்றனர்.எனவே முஸ்லிம்கள் மிகப் பழமை வாய்ந்த வரலாற்றைக் கொண்டவர்கள். இவர்கள் அன்று முதலே தமக்கென தனிச்சிறப்பான சட்டங்களையும் பின்பற்றி வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் புராதன சிங்கள மன்னர்களது காலப் பிரிவுகளிலும் தமது தனித்துவமான சட்டங்களைப் பின்பற்றிக் கொண்டே கரையாது கலந்து வாழ்ந்து வந்துள்ளனர். சிங்கள மன்னர்களது அபிமானத்தினை வென்று வாழ்ந்ததன் காரணத்தினால் அவர்கள் தமது சட்டங்களைப் பின்பற்றுவதில் எவ்விதச் சிக்கல்களையும் எதிர்கொள்ளவில்லை.

புராதன இலங்கை வாழ் முஸ்லிம்களும் அவர்கள் தமது அன்றாட வாழ்வில் இஸ்லாமிய நடைமுறைகளைக் பின்பற்றியதன் விளைவாக நீதித்துறை தொடர்பான அவர்களது நடைமுறைகளும் வழக்காறுகளும் தனித்துவம் வாய்ந்தனவாக அமைந்திருந்தமையை அவதானிக்கலாம்.சிங்கள மன்னர்களின் கீழ் வாழ்ந்த முஸ்லிம்கள் தமக்கென தனியான சட்டமரபினை செயற்படுத்தினர் என்பது அதனை மேலும் வலுவடையச் செய்கின்றது. (பாரூகி 1986) அதன் பின்னரான காலணித்துவ காலப்பகுதியிலும் சட்டங்களும், செயற்பாடுகளும் ஒரு வடிவம் பெற்றிருந்தன எனலாம். இதனை உறுதி செய்வதாக இத்ரீஸியின் குறிப்புக்கள் அமைகின்றன.இந்நிலை படிப்படியாக வளர்ச்சியடைந்து தனியான சட்ட மரபாக எடுத்துக் காட்டப்படக் கூடியதாக விளங்குகின்றது. குறிப்பாக ஒல்லாந்தர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்களின் இத்தனியான சட்டமரபினை ஏற்றிருந்ததுடன். முஸ்லீம் சட்டம் முதன்முதலில் இவர்களது காலப் பிரிவிலேயே எழுத்துருப்படுத்தப்பட்டது. 17ம் நூற்றாண்டில் ஒல்லாந்து கவர்ணர் குடயஉம முஸ்லிம்களது வழக்காறுகளைக் கோவைப்படுத்தப் பிறப்பித்த கட்டளைக்கிணங்க முதன் முதலில் By Sunder wetten aargande moover அதாவது முஸ்லிம்கள் தொடர்பான சட்டக் கோவை தொகுக்கப்பட்டது. இதுவே முஸ்லீம் சட்டம் தொடர்பான முதல் எழுத்துருவாகும். ஆங்காங்கே சிற்சில சிக்கல்கள் இடம்பெற்றிருப்பினும் அவர்கள் தமது சொந்த, தனித்துவமான சட்டதிட்டங்களைப் பின்பற்றுவதில் எவ்வித தடையும் எழவில்லை (நடராஜா, 1972).

முஸ்லிம்கள் இஸ்லாமிய நடைமுறைகளைக் கொண்டவர்கள் என்ற அலக்ஸான்டர் ஜோண்ஸ்டன் கூற்றும், இஸ்லாமிய சட்டவியலைத் தொகுப்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளும் எடுத்துக்காட்டுக்களாகும்(அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன்). இதன் பின்னர் 1806 இல் ஆங்கிலேயர் காலத்தில் கவர்ணர் அலெக்ஸாண்டர் ஜோண்ஸ்டன் தலைமையில் “முஹம்மதியன் கோவை” “The Mohammedian Code” ஆக்கப்பட்டது (ஜப்பார், 2014). இக்கோவையானது விவாகம், விவாகரத்து, வாரிசுரிமை தொடர்பான விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இம்முயற்சிகள் படிப்படியாக பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு தொடர்ந்த வண்ணம் இருந்தன. எம்.ரீ. அக்பரின் பரிந்துரைக்கமைய 1929ம் ஆண்டின் 27ம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் ஏற்படுத்தப்பட்டு 1937ல் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பின்னணியில் உருவான 1951ம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தோற்றுவிக்கப்பட்டது. 2ம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் முஸ்லிம்களுக்கான தனியான நீதிப் பாரம்பரியம் நிறுவனமயப்படுத்தப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன எனலாம். (மர்சூப் 2004) தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள காழி நீதிமன்றங்கள் 1951ம் ஆண்டின் 13ம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் 12ம் பிரிவின் படி சட்டவலுவினைப் பெறுகின்றது(ஜப்பார்,2014).

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்பகாலம் முதலே தமது செயற்பாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பல்வேறு நிறுவனங்களைக் கொண்டிருந்தனர் எனலாம். இந் நிறுவனமயமாக்கலிற்கான வழிகாட்டுதல்களை முஸ்லிம்கள் இஸ்லாமிய வரலாறுகள் மூலம் பெற்றுக் கொண்டனர் என்பது சான்றுகள் வாயிலாக நிரூபனமாகின்றது. நபி(ஸல்) அவர்களை பிரதம நீதியரசராக கொண்டு மதீனா நகர் திகழ்ந்தது. முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்கள் யமன் தேசத்து மக்களின் பிணக்குகளை தீர்க்கும் பணியில் தமது பங்களிப்பை அல்-குர்ஆன், அஸ்-ஸுன்னா மற்றும் சுயசிந்தனையின் நிழழில் வழங்க பணிக்கப்பட்டாரகள். சுயசிந்தனையை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டமை புலனாகின்றது (இப்னுல் காஸ், 2007). அதே சமயம் உத்பா இப்னு அஸ்யத் (ரலி) அவர்கள் மதீனாவுக்கும் நியமிக்கப்பட்டார்கள். நபியவர்களின் மரணம், இராச்சிய விஸ்தரிப்பு போன்றவற்றின் பின்னர் நீதித்துறை நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டன. உமர் (ரழி) அவர்களால் காழிகள் நியமிக்கப்பட்டனர். அபூ மூஸா அல் அஷ்அரீ, ஷுரைஹ் (ரழி) (அல்-ஸரக்ஷி பாகம் 27) அனஸ் இப்னு மாலிக் (ரழி)

இம்ரான் இப்னு ஹுஸைன் (ரழி) ஹாஷிம் இப்னு ஆமிர் (ரழி) போன்றோர் உமர் (ரழி) அவர்களால் காழிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். (வகீஉ 918),உஸ்மான் (ரழி) அவர்களது ஆட்சிக் காலப்பிரிவில் நீதிபதிகளுக்கான பிரத்தியேகமான தங்குமிட வசதியுடன் இணைந்த மேலும் பல வசதி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. நீதித்துறையின் சுயாதீனமான இயக்கத்திற்கு அவ்வாய்ப்புக்கள் பயன்படுத்தப்பட்டன.

இலங்கை முஸ்லிம்கள் கொண்டிருந்த நிறுவனங்கள் பெரும்பாலும் பிரதான சமய நிறுவனமான பள்ளிவாயல்களுடன் இணைந்து இயங்கின என கூறப்படுகின்றது. அவற்றுள் முஸ்லம்களின் சமய வாழ்வை இஸ்லாமியமயப்பட்டதாக அமைத்துக் கொள்வதற்காகவும் முஸ்லிம்களின் விவகாரங்களை, பிணக்குகளை கையாள்வதற்காகவும் காதி நீதிமன்றம் தொழிற்பட்டுள்ளது. பள்ளிவாயிலிலோ அல்லது இணைந்தோ இந்நிறுவனம் இயங்கியதாக கொள்ளமுடியும். போர்த்துக்கேயர் வருகையின் போது காணப்பட்ட கொழும்பு பெரிய பள்ளிவாயில் மற்றும் இஸ்லாமிய சட்டத்திற்கமைவாக பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நீதிமன்றம் போன்ற நிறுவன அமைப்பு ஆகியன இதனை உறுதி செய்வதாக அமைகின்றது. (பாரூகி, 1986)

தற்போது நாடளாவிய ரீதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பரவிச் சிதறுண்டு வாழும் பகுதிகளிலும் சனத்தொகைக்கேற்ற விதத்தில் காழி நீதி வலயங்கள் அமைக்கப்பட்டு காழி நீதிச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. மேற்கூறப்பட்ட அடிப்படையில் பூர்வீக முஸ்லிம் பிரதேசமாக திகழும் சம்மாந்துறை பிரதேசத்திலும் நீண்டகால வரலாற்றுடன் கூடிய காழி நீதிமன்றம் செயற்பட்டு வருகின்றது. இருப்பினும் தற்கால இலங்கை சூழலில் காழி நீதித்துறை குறிப்பிடத்தக்க சேவையை வழங்குகின்ற போதிலும் அவற்றின் கடட்டமைப்பு அவற்றால் முன்மொழியப்படும் தீர்ப்புகள், முகாமைத்துவம் சார்பில் பல்வேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையை பரவலாக அவதானிக்கலாம். மாத்திரமல்லாது முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் நிலவிய பல்வேறு சர்ச்சைகள் அவற்றின் சீர்திருத்தம் தொடர்பான சுயாதீனக் குழுக்களின் ஆலோசனைகளுக்கமைவாக (சபானா குல் பேகம், 2014) முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் பெண்ணிய செயற்பாட்டாளர்களதும் சமுகவியலாளர்களதும் கவனத்தை ஈர்த்தவொரு அம்சமாக இது அடையாளப்படுத்தப்படுகின்றது. காதி நீதிச்சேவைகளின் போதான பாரபட்சங்கள் பால்நிலை சமத்துவமின்மையை அடையாளப்படுத்துகின்றது(ஹஸனா, 2015). இப் பின்னணியின் அடிப்படையில் இவ்வாய்வானது சம்மாந்துறை காழி நீதிமன்றம் அதன் கட்டமைப்பு நிர்வாகம் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்கிறது.

## ஆய்வு முறைமை

பண்பு ரீதியிலான இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு குறிக்கோள் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் அம்மாதிரிகளிடமிருந்து தரவுகளை சேகரிப்பதற்கு முறையாக கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்படாத அடிப்படையிலான நேர்காணல்கள் மேற்கொள்ப்பட்டதுடன் கள அவதானமும் பதிவுசெய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் திறத்தவர்கள், காழி நீதிபதி உட்பட ஏனைய காழி நீதிமன்ற அலுவலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ,சமயத் தலைவர்கள், சமூக வழிகாட்டிகள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், பிரதேச வரலாற்றுப்புலமை கொண்டவர்கள் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர்.நேரடி களக் கண்காணிப்பை மேற்கொள்வதற்காக நீதிமன்ற செயற்பாடுகள் ஆய்வாளனின் மூலம் நேரடியாக சென்று அவதானிக்கப்பட்டது. வழக்கு நடவடிக்கைகள் இடம்பெறும் 30 தினங்களும் ஏனைய அலுவலக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் 20 தினங்களும் கண்காணிக்கப்பட்டன. வழக்கு நடவடிக்கைகள் இடம்பெறும் தினங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானத்தின் மூலம் வழக்கு நடவடிக்கையின் ஒழுங்கு முறைகள், நீதிபதியின் நடத்தைகள், ஏனைய அலுவலர்களின் பொறுப்புக்கள் நடத்தைகள், நீதிச் சகாயர்களின் பொறுப்புக்களும் ஒத்துழைப்புக்களும், உளவியல் நிபுணர்களின் ஒத்துழைப்பும் தேவைப்பாடும், பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு, முகாமைத்துவ உதவியாளர்களின் செயற்பாடுகளும், அவதானிக்கப்பட்டதுடன் நீதிமன்றில் இடம் பெறும் பல்வேறு வகையான வழக்கு விசாரணைகளும் அவதானிக்கப்பட்டது. அலுவலக நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டு தினக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டதற்கிணங்க இத்தினங்களில் இடம்பெறும் வழக்கேற்றல், ஆலோசனை வழங்கல், பணம் செலுத்துதல், பணம் பெற்றுக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டு குறிப்புக்கள் பெறப்பட்டு அவை ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.மாத்திரமல்லாது சம்மாந்துறை குவாஸி நீதிமன்றத்தில் பேணப்படும் ஆவணங்கள் மூலம் ஆய்வுக்குத் தேவையான தகவல்கள் பெறப்பட்டன. இதற்கென

குவாஸி நீதிமன்றில் பேணப்படும் தனித்தனியான பதிவுப் புத்தகங்கள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டதுடன் இது தொடர்பில் அமைந்த பல்வேறு நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் கருத்தமைவினைக் கட்டமைப்பதற்கான இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையிலான பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைகின்றது.

## கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

சம்மாந்துறை காழி நீதிமன்ற உருவாக்கம் மற்றும் செயல்பாட்டு பின்னணி இலங்கையில் இன்று நடைமுறையில் காணப்படுகின்ற 20ம் நூற்றாண்டின் 3ம் தசாப்த கால பகுதியிலேயே உருவாக்கப்பட்ட காழி நீதிமன்ற முறைமையுடன் தொடர்புபட்டது. இலங்கையில் ஒரு காதி நீதிமன்ற முறைமை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்திய நிகழ்வு வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகும்.1925ம் ஆண்டு அரசு எதிர் மிஸ்கின் உம்மா 26 NLR 330 என்ற வழக்கின்உயர் நீதிமன்ற தீர்ப்பு (மர்சூப், 2004)காதி நீதிமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான உந்துதல்களை முஸ்லீம்களிடையே ஏற்படுத்தியது எனலாம். 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியிலேயே நிறுவப்பட்ட காதி நீதிமன்றுகளில் ஒன்றாக சம்மாந்துறை காழி நீதிமன்றம் உள்ளது. 1935ம் ஆண்டு முதலே சம்மாந்துறையில் காதி நீதிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்ததன என குறிப்பிடப்படுகின்றது. விளைவில் தற்பொழுது இலங்கையில் 65 காதி நீதிமன்றங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

ஆயினும்,கிழக்கிலங்கையில் பழம் பெரும் நகரங்களில் ஒன்றான சம்மாந்துறையின் பூர்வீக வரலாற்றுடன் காழி நீதிமன்றம் போன்ற நிறுவனங்களின் பணிகளை தொடர்புபடுத்த முடியும். அம்பாறை மாவட்டத்தின் “தென்கிழக்கு” என அடையாளப்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் செறிந்து வாழும் இப்பிரதேசம் சிங்கள மன்னர்கள் காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்தமைக்கு பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. Doiyly என்ற பிரித்தானிய தூதுவர் போர்த்துக்கேயரின் காலத்தில் சம்மாந்துறை கண்டி ராச்சியத்தின் பிரதான துறைமுகமாக இருந்தது என தனது தினக் குறிப்பில் பதிந்துள்ளார்(பட்டறை, 2009). ஒல்லாந்து தளபதியான ஸ்பில்பேர்கன் என்பவர் இந்தியாவில் மட்டக்களப்பு ஆறு எங்கேயுள்ளது என விசாரித்து அறிந்து சம்மாந்துறையை வந்தடைந்து, சம்மாந்துறை முஸ்லிம்களின் உதவியோடு கண்டி அரசன் விமலதர்மசூரியனை சந்திக்க சென்றுள்ளான் என்ற குறிப்பேடுகளும் உள்ளன. சம்மாந்துறையின் முக்கியத்துவத்தினால் இங்கு அமையப்பெற்றிருந்த பாரிய சந்தை (ஆலையடி என்றழைக்கப்பட்ட பழைய மார்க்கட்) வெளிநாட்டு வர்த்தகர்களை ஈர்க்கத் தவறவில்லை. அதன் காரணமாக அராபிய முஸ்லிம்களின் வருகையும் தவிர்க்க முடியவில்லை. இறை நல்லடியார்களும் வந்து கொண்டிருந்ததன் காரணத்தினால் முஸ்லிம் குடியிருப்புக்கள் இங்கு அமையப் பெறலாயின(பட்டறை, 2009).வர்த்தக நோக்கில் சம்மாந்துறையில் தாமதித்துச் செல்ல வேண்டி இருந்ததனால் வணக்கஸ்தலத்தின் அவசியம் உணரப்பட்டு 12ம் நூற்றாண்டளவில் முகைதீன்பள்ளி என்ற முதல் பள்ளிவாசல் அமையப் பெற்றது. 15ம் நூற்றாண்டளவில் சம்மாந்துறை துறைமுகத்தில் வந்திறங்கிய இறை நல்லடியார்களின் வருகையை தொடர்ந்தான இவர்களது மார்க்கப் பிரசங்கம், பேணுதலான நடவடிக்கைகள் ஆகியவற்றால் அப்பிரதேசத்தில் இஸ்லாத்தின் இருப்பும் வளர்ச்சியும் அதிகரிக்கலாயின. முஸ்லிம்கள் மாத்திரமன்றி தமிழ் மக்களும் இந்நல்லடியார்களுக்கு மதிப்பும் மரியாதையும் வழங்கலாயினர் (பட்டறை 2009).

இப்பிரதேசத்தின் நீதி நிர்வாகத்தை திறம்பட மேற்கொள்வதற்கு என அன்று பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வந்துள்ளன. சம்மாந்துறைப் பிரதேச நிர்வாகத்திற்காக “கிராமக்கோடு” எனும் நிறுவனம் செயற்பட்டு வந்தது(முஸ்தபா, 2004).இது பிரதேசத்தின் நீதி நிறுவனமாகவும் தொழிற்பட்டது. இதன் மூலம் பிரதேசத்தின் சகலவிதமான பிணக்குகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்போது முஸ்லிம்களது குடும்ப பிணக்குகளும் அக் “கிராமக்கோடு” மூலமே கையாளப்பட்டன. அன்றைய நாட்களில் அதன் நிர்வாகம் சகோதர மதத்தினரான இந்துக்கள் வசம் இருந்தமையால் முஸ்லிம் பெண்கள் எதிர் கொள்ளுகின்ற அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு, சட்டம் தொடர்பாக அறிந்த பிரதேசப் பிரமுகர்களின் முயற்சியின் விளைவாக காதி நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. 1935களில் முஸ்லிம் குடும்பப் பிணக்குகளை சமரசம் செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந் நீதிமன்றம் “காதிக்கோடு” என மக்கள் மத்தியில்

பிரபல்யம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது(முகைதீன், 2015). இற்றைக்கு 83 ஆண்டுகளாக இக் காதி நீதிமன்றம் இயங்கி வருவது சிறப்பம்சமாகும்.

நீதி வலயங்கள் தொடர்பான எண்ணக்கருகள் இஸ்லாமிய நீதி பரிபாலனம் (Jazeel & Fowzul,2014) மற்றும் பாரம்பரிய இலங்கையின் நீதிமன்ற முறைமையினுள் முக்கியத்துவம் பெற்றவை.இஸ்லாமிய நீதிபரிபாலனத்தின் வரலாற்றில் நீதி நிர்வாகத்தில் வலயங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்ததனை நபி (ஸல்) அவர்கள் யமன் மக்கா போன்ற பிரதேசங்களுக்கு நீதிச்சேவைகள் வழங்கும் நிமித்தம் ஸஹாபாக்களை நியமித்தமை புலப்படுத்துகின்றது. அத்துடன் உமர் (ரலி) அவர்கள் தமது ஆட்சிக் காலப்பிரிவில் நீதிபதிளை ஒவ்வொரு பிரதேசத்திற்கும் நியமித்தமை மேலும் வலுப்படுத்துகின்றது(இப்னு ஸஅத்ஈ). வரலாற்றில் இராஜ்ய விஸ்தரிப்பு இதற்கு பிரதான காரணியானது எனலாம். எனவே சனத்தொகையின் வளர்சிக்கேற்ப வலயங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதனை அவதானிக்கலாம்.

நீதிதுறை நடவடிக்கைகளை திறம்பட மேற்கொள்ள என பல்வேறு படிமுறைகள் நீதிமன்ற பதவணிகள் அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். காலணித்துவ நீதிமன்ற முறைமையை தழுவியதாகவே இவை காணப்படுகின்றன. இவற்றை தழுவியதாக சம்மாந்துறை காழி நீதி வலயமும் கட்டமைக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது. ஆரம்பங்களில் சம்மாந்துறை நீதிவலயம் சம்மாந்துறை, வரிப்பத்தான்சேனை, இறக்காமம் போன்ற நிலப்பரப்புக்களை உள்ளடக்கிய பெரும் பிரிவாகக் காணப்பட்டது. சம்மாந்துறையில் இருந்து சுமார் 27.9கி.மீ இற்கு அப்பால் இறக்காமம், வரிப்பத்தான் சேனை ஆகிய பிரதேசங்கள் காணப்படுகின்றன. இதில் சம்மாந்துறைப் பிரதேசம் 52 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசமாகும். இம்மூன்று பிரதேசங்களினதும் முஸ்லிம் சனத்தொகையின் குடும்ப விவகாரங்களைக் கையாள வேண்டிய கட்டாயம் அன்று காணப்பட்டது. இது பல்வேறு நெருக்கடிகள் மற்றும் அசௌகரியங்களைத் தோற்றுவித்தது எனலாம். பின்னர் வலயக் குறுக்கம் இடம் பெற்றதன் விளைவால் அப்பிரதேசங்களில் தனியான காழி நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

தற்போதய சம்மாந்துறை காழி நீதிமன்ற நிர்வாக வலையத்தினுள் சம்மாந்துறை, மல்வத்தை, சென்றல்கேம்ப், நாவிதன் வெளி, அன்னமலை போன்ற பிரதேசங்கள் காணப்படுகின்றன. சம்மாந்துறை தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் சனத்தொகையால் முஸ்லிம்களைக் குறைவாகக் கொண்டனவாகும்.தற்போதைய நீதிவலயத்திற்குட்பட்ட நாவிதன் வெளிப் பிரதேசம் 12 கி.மீ தொலைவிலும், அன்னமலை பிரதேசம் 14.8 கி.மீ தொலைவிலும், மல்வத்தை 10 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளன. வலயக்குறுக்கமானது பல்வேறு சிக்கல்களை தவிர்ப்பதற்கான உபாயமாக அமைந்துள்ளது. போக்குவரத்துடன் தொடர்பான சிக்கல்கள் தவிர்க்கப்பட்டு பரிபாலனம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது(ஸலாம்,2015).

குறித்த ஒரு குடும்பத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டதாக காணப்பட்டிருந்த நிலை படிப்படியாக மாற்றம் கண்டுள்ளது. அன்றைய நாட்களில் பிரதேசத்தின் பிரபலங்கள் எனவும் பொருளாதார பலம் படைத்தவர்கள் எனவும் அறியப்பட்ட நபர்கள் அப்பதவியை கையகப்படுத்திக் கொண்டனர். இவர்கள் இப்பதவியை தக்கவைக்கும் பொருட்டு அதற்கான கையூட்டாக பாற்பொருட்கள், தயிர், வெண்ணெய் முதலியனவும் அரிய வகைக் கருவாடுகளும் அன்பளிப்புக்களாக உயர் பீடங்களுக்கு வழங்கப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது. வரலாற்றில் கௌரவத்தின் அடையாளமாக இப்பதவி அடையாளப்படுத்தப்பட்டிருந்தது(முகைதீன்.எ 2015). இதற்கென போட்டி நிலவியதனை அறியக்கிடைக்கின்றது. எம். யூ. உதுமாலெப்பையும் கூட்டுறவு அதிகாரி இப்றாலெப்பையும் போட்டியிட்டதாகவும் புத்தளத்து ஆலிம் தலையீட்டுடன் எம்.யூ. உதுமாலெப்பை காதி நீதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் எனப்படுகின்றது. (மீராலெப்பை,2018) எம்.யூ.உதுமாலெப்பை அவர்கள் 24 வருடங்கள் காதி நீதிபதியாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

1956 முதல் 1965 வரையில் யூ.எம்.சுலைமாலெப்பை என்பவர் பதவிவகித்ததுடன் அவரின் பின் அப்பதவி அவரின் மகனான மீரான் சாஹிப் இன் வசமானது. அவர் 33 வருடங்கள் பதவிவகித்துள்ளார். 1965 முதல் 1998 வரையான காலப்பகுதியில் கடமையாற்றிய இவர் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு கௌரவிக்கப்பட்டார் எனப்படுகின்றது.இவரது மரணத்தின் பின்னர் நிந்தவூர் பிரதேசத்தினை சேர்ந்த எஸ்.எச்.எல்.ஏ. கபூர் என்பவர் ஒரு வருடகாலம் கடமையாற்றினார். இவர் ஒரு ஒய்வு பெற்ற அதிபராவர். பின்னர் இவரைத் தொடர்ந்து

2003ம் ஆண்டு வரை மௌலவி எம்.ஏ.எம். ரூஹுல்லாஹ் அவர்கள் கடமைபுரிந்ததுடன் 2009 வரையான காலப்பகுதியில் எஸ்.எல்.ஏ. றஷீட் அவர்கள் கடமையாற்றினார்கள்.2009 முதல் தற்போது வரையில் ஒய்வு பெற்ற அதிபர் எஸ்.எல்.ஏ. ஸலாம் அவர்கள் பதவி வகித்து வருகின்றார். 1944 ம் ஆண்டு பிறந்த இவர் குவாஸி நீதிபதியாக பதவியேற்க முன்னரும் பல்வேறு சேவைகளை இப் பிரதேசத்தின் கல்வித் துறைக்கு நல்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவ்வகையில் இவர் ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், போதனா ஆசிரியர் (தொழில் நுட்பக்கல்லூரி சம்மாந்துறை), அதிபர்(சம்மாந்துறை மத்திய மகா வித்தியாலயம் 1988-1993), உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் போன்ற பாத்திரங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கல்விப்பணி ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பிரதேச காழி நியமனங்களை எடுத்து நோக்குகையில் ஆரம்பத்தில் கல்வித்தகைமை ஒரு பொருட்டாக கொள்ளப்படவில்லை. அத்துடன் குறித்த துறைசார் அறிவேனும் காணப்பட வேண்டும் என்ற எந்த நிபந்தனையும் காணப்படவில்லை என்பது புலனாவதுடன் கல்விபின்னனியுடன் கூடிய நபர்களே பெரும்பான்மையினர் என்பது புலப்படுகின்றது.மேலும் பெண் காதிகள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. பெண் காதிகளை நியமிப்பது குறித்த எந்தவொரு முன்னெடுப்புக்களும் வெற்றியளிக்காத சூழலையும் விருத்தியடையாத மனோபாவத்தினையும் அவதானிக்கலாம் (நௌஷாட்,) ஆயினும் அது குறித்த தேவை உணரப்படுவதைவும் ஆர்வம் கொண்ட ஆளனியொன்றின் செயற்பாடுகளையும் அவதானிக்க முடிகிறது(றிபா, 2015). எவ்வாறாயினும் போதுமான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாத நிலையிலும் நீதியை நிலைநாட்டுவதன் அவசியம் தொடர்பில் கற்றுத் தேர்ந்த ஒரு சமூகத்தினர் பராமுகமாக உள்ள நிலையிலும் பிரதேசத்தின் நலனைக் கருதி இவர்கள் மேற்கொண்ட இப்பணி சம்மாந்துறைப் பிரதேசத்தின் வரலாற்றில் மெச்சத்தகு அம்சமேயாகும்.

2009 களின் பின்னர் ஒரு முறையான அலுவலர் பதவணி செயற்படுத்தப்பட்டு வருவதனை அவதானிக்க முடியுமாக உள்ளது.(ஸலாம் 2015) காழி நீதிபதி, நீதிச்சகாயர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள்,உளவளத்துணை ஆலோசகர்கள் ஆகிய நபர்களை உள்ளடக்கியதாக இப்பதவணி காணப்படுகின்றது. இவர்களுக்கான குறிப்பான மற்றும் கூட்டான பொறுப்புக்களும் கடமைகளும் காணப்படுகின்றன.

காழி நீதிபதியே பிரதான வகிபாகத்திற்கு உரியவராகவும் தற்துணிவுடன் கூடிய முடிவுகளை மேற்கொள்ள ஆற்றல் கொண்டவராகவும் காணப்படுகின்ற போதிலும் அவரது சகல நடவடிக்கையின் போதும் ஏனைய பதவி நிலை அங்கத்தவர்களின் ஒத்துழைப்புக்கள் இன்றியமையாதனவாகின்ற அடிப்படையில் நீதிச்சகாயர்கள் எனப்படும் ஜுரிக்களது பங்களிப்பு காத்திரமானதாக அமைவதனை அவதானிக்கலாம். முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பிரிவு 47ன் பிரகாரம் இவர்களது நியமனம் இடம்பெறுகின்றது. நீதிச்சகாயர்கள் எனப்படும் ஜுரிக்களை நியமிப்பதானது கட்டாயமாகும்.பிணக்குகளை சமரசத்திற்கு கொண்டுவரும் முயற்சியில் காழி நீதிபதிக்கு இவர்களாலான முழு ஒத்துழைப்பும் வழங்கப்படுகின்றது.(மக்கி.எம்2011) ஆனால் குறித்த இப்பதவிக்கான நியமனம் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் அவதானிக்கத்தக்கது. இப்பணிக்காக கல்விமான்கள், மார்க்க கல்விஞானம் கொண்டவர்கள், சிறந்த சிந்தனை கொண்ட ஆளுமைகள் பொருத்தமான போதிலும் இங்கு வயது முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர்கள் என நம்பப்படும் ஒரு சிலர் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் மூலம் குறித்த இலக்கு எட்டப்படுவதில் பல்வேறு இடர்கள் எழுவது குறிப்பிடத்தக்கது.

பிணக்குதாரர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தும் வகையிலும் காதி நீதிமன்றதின் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையிலும் உளவளத்துணை ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்பு மிகையாகாது. குடும்ப வாழ்வின் இடர்களை எதிர்கொள்ளவும், வாழ்வை திட்டமிடவும், குழந்தை நலன் பேணவுமான காத்திரமான ஆலோசனைகளை இவர்கள் வழங்குகின்றனர். அடையாளம் காணப்பட்ட நபர்களை வழிப்படுத்தும் முயற்சியில் இவர்கள் நேரகாலம் பாராது ஈடுபடுவது சிறப்பம்சமாகும்.இவற்றிற்கு மேலதிகமாக இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இப் பிரதேசத்தின் பொதுச் சேவை நிறுவனங்கள் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி வருவது அவதானிக்கத்தக்கது. இவ்வகையில் சம்மாந்துறை பிரதேச செயலகம் மூலம் காத்திரமான பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. உளவளத்துணைக்கான சேவை வழங்குவதுடன் மாத்திரம் சுருங்கிவிடாது வாழ்வாதார மேம்பாட்டிற்கு விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றது. காதி நீதிமன்றத்தின் உதவியுடன் அவ்வாறான நபர்கள்

இனங்காணப்படுகின்றனர். மேலும் சிறுவர் நலன் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது.

சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. 3 மாதங்களுக்கு ஒரு தடவை காழி நீதிமன்ற அலுவலர்களுடனான சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்கள், நீதிவான் நீதிமன்ற நீதிபதியால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது காதி நீதிமன்ற மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் பெறப்படுகின்றன. இது சிறந்த அறிவு, மற்றும் அனுபவப் பரிமாற்றத்திற்கான வழியாகும்.மேலும் முகாமைத்துவ உதவியாளர் காதியின் கட்டளைக்கிணங்க ஆவணங்களை தயார் செய்யும், ஒழுங்குபடுத்தும் மற்றும் கோப்பாக்கும் முயற்சியில் ஈடுபடுவர். இவர்களது உதவியால் காதி நீதிபதி முழுமையாக திறந்தவர்களுடன் தமது நேரத்தை செலவு செய்ய வாய்ப்பு கிட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக விசாரணை தினங்களில் திறந்தவர்கள் அல்லது அவர்களது உற்றார் உறவினர்கள் முரண்பாட்டு சூழலை முற்கூட்டியே தடுக்கும் வகையில் சம்மாந்துறை பொலிஸ் நீதிமன்றதால் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். காதி நீதிமன்ற ஒழுங்குகளை மதியாது அத்துமீறுவோருக்கு எதிரான நடவடிக்கை இவர்களால் மேற்கொள்ளப்படும். இவ்வலுவலர்களது சேவைகள் இந் நீதிமன்றத்தை வரலாற்றுக் கட்டமைப்பிலிருந்து நகர்த்தி இருப்பதனை அவதானிக்கலாம்.

ஆரம்பங்களில் நிரந்தரமான ஒரு பிரதிதியேக இடவசதி இன்மையால் மரநிழல்களின் கீழும் முற்றத்து வெளிகளிலும் முறையற்ற ஆசன ஏற்பாடுகள் எதுவுமின்றிய நிலையிலும் இடம்பெற்ற வழக்கு நடவடிக்கைகளும் முறையான அலுவலகம் ஆவணப்படுத்தல் இன்றிய நடைமுறைகள் மூலமும் பலவகையான நிர்வாக நடைமுறை சிக்கல்கள் எதிர்க்கொள்ளப்பட்டன. காழி நீதிபதியின் இருப்பிடமே அன்று நீதிமன்ற செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. வாடகைக்கட்டிடமும் ஒரு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டது என்பதும் புலனாகின்றது. 2011ம் ஆண்டில் அதற்கென தனியான அரச கட்டிடமொன்று வழஙகப்பட்டு அமைவிடத்திற்கான நிரந்தர தீர்வு காணப்பட்டது. இலங்கையில் நிர்மானிக்கப்பட்ட முதற் கட்டிடத் தொகுதி சம்மாந்துறை காழி நீதிமன்ற கட்டிடத் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பகால காழி நீதிச் செயற்பாடுகள் நீதிபதியின் சொந்த வாசஸ்தலத்திலேயே இடம் பெற்றுள்ளது.பஞ்சாயத்து முறைமையை ஒத்த தன்மையதான செயற்பாடுகளும் இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றது. திறந்தவர்களுடன் எவ்வகையிலும் தொடர்பற்ற பொதுமக்கள், ஊர்ப்பிரதானிகள், காழி நீதிபதிக்கு வேண்டப்பட்டவர்கள் என பலரும் விசாரணையின் போது குழுமி இருந்தனர்.இதன் விளைவாக தனிமனித அந்தரங்கம் இரகசியங்களைப் பேணுவதில் நிர்வாகமும் திறத்தவர்களும் பல்வேறு இடர்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை உருவானதாக கூறப்படுகின்றது. காழி நீதிமன்றம் கையாளும் விடயங்களில் அதிகமானவை உணர்வுபூர்வமானவையும் திறத்தவர்கள் தங்களை முழுமையாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் கொண்டவையும் ஆகையால் பஞ்ஞாயத்து சாயல் சவால்மிக்கதாகவே விளங்கியதெனலாம்.

தற்போதைய காதி நீதிமன்றம் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட காதி நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் அதன் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இக்கட்டிடத் தொகுதியானது காழி நீதிபதியின் அலுவலக அறை ஒன்றையும் வழக்கு விசாரனைக்கு பயன்படுத்தத்கூடியவாறான அலுவலக அறையை விட சற்று விசாலமான ஓர் அறையையும் கொண்டதாக அமைந்துள்ளது. உளவளஎத்துனை செயற்பாடுகளை பரந்தளவில் மேற்கொள்ள உகந்தவாறு பிரத்தியேக வசதி வாய்ப்புக்கள் எதுவும் இங்கு காணப்படவில்லை. குடும்ப வாழ்வு தொடர்பில் அல்குர்ஆன் குறிப்பிடுகையில் கணவனை மனைவியின் ஆடைக்கும்,மனைவியை கணவனின் ஆடைக்கும் ஒப்பிட்டுக் கூறுகின்றது. இதன் மூலம் குடும்ப வாழ்வு உணர்வு பூர்வமான அம்சம் எனக் கொள்ளலாம். கணவன் மனைவியின் நெருக்கம் என்பது மிக முக்கியமான அம்சம் என குறிப்பிடுகின்றது. எனவே பிணக்குகள் எழுகின்ற போது மேற்கூறப்பட் அம்சம் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது மிக முக்கியமான அம்சமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போதே பிரத்தியேக விசாரணைக்கான இடம் ஒன்றின் தேவை உணரப்படுகின்றது.

இங்கு மின்சாரம், மற்றும் குடிநீர் வசதிகள் காணப்படுகின்றது. அது மாத்திரமல்லாது விசாரணையின் போது சமூகமளிப்பவர்கள் அமர்வதற்கான வசதி ஏற்பாடுகளும் காணப்படுவதுடன் காரியாலயம் தொலைபேசி வசதிகளும் காணப்படுகின்றன. பகுதியளவில் நீதிமன்றம் ஒன்று கொண்டிருக்க வேண்டிய சில பௌதீகப் பண்புகளையும் இது கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.அலுவலகமும் விசாரணை கூடமும் தனித்தனியாக

அமைந்திருப்பது சிறப்பம்சமே ஆகும். அலுவலக கோப்புக்களை பாதுகாப்பாக பேணி வைப்பதற்கான ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் காதி நீதிபதியின் சொந்த வாசஸ்தலத்திலேயே செயற்பாடுகள் இடம் பெற்று வந்தன. இதன் போது திறந்தவர்கள் பல்வேறு வகையான அசௌகரியங்களை எதிர்கொண்டனர். அச்சமயங்களில் காதி நீதிபதியின் வாசஸ்தலத்தில் பிரபுத்துவ நடைமுறைகள் இடம் பெற்றதாக கூறப்பட்டது. காதி நீதிபதியினதும் அவரது குடும்பத்தினரதும் அவர்களது விவசாய நடவடிக்கைகளுக்கும், கால்நடை பராமரிப்பிற்கும், வீட்டு வேலைகளுக்கும், திறத்தவர்கள் பயன்படுத்தப்பட்டதாக அறியப்படுகின்றது.

சம்மாந்துறை காழி நீதிமன்றம் ஒரு முறையான காரியாலத்தினை தன்னகத்தே கொண்டதாக காணப்படுகின்றது. இக்காரியாலயமானது ஒரு முறையான நேரசூசிப்படி இயங்குகின்றது. பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு ஏற்றவகையில் வார நாட்கள் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இவ்வாரநாள் பணிப்பகுப்பின் விளைவாக பல்வேறு செயற்பாடுகள் ஒரே தினத்தில் மேற்கொள்ளப்படுவதனால் உருவாகும் தவிர்க்கமுடியாத சில பிழைகள் முற்றாக களையப்பட்டுள்ளதுடன் முறையான ஒரு சீர்திறனான செயற்பாடு ஒரு தினத்தில் இடம்பெற வழியமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வினைத்திறனான செயற்பாடுகள் இடம்பெறுகின்றமை புலனாகின்றது. வழக்கு விசாரணைகள் ஒரு தினத்திலும் ஏனைய அலுவலக செயற்பாடுகள் அதற்கென குறிப்பிட்ட தினத்திலும் இடம்பெறுகின்றது.

ஒரு குறிப்பிட்ட காலப்பிரிவு வரையில் பதிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவோ ஆவணப்படுத்தப்படவோ இல்லை. இந் நிலையில் படிப்படியாக மாற்றம் நிகழ்ந்து 2003ம் ஆண்டுகளிலிருந்தே பதிவு செய்யப்படும் செயன்முறை ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து இச்செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துவருகின்றமை கண்கூடாகும். ஆன்றைய நிர்வாகத்தில் ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதுடன் தொடர்பான விஷேட நடைமுறைகள் பேணப்பட்டு வருகின்றது.இதற்காகப் பல்வேறு பதிவேடுகள் பேணப்பட்டு வருகின்றன. இப்பதிவேடுகள் மக்களுக்கு கால விரயமற்ற சேவையை வழங்க துணைபுரிவது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒவ்வொரு காரியத்தின் நிமித்தமும் திறத்தவர்களுக்கான தனித்தனியான கோப்புக்கள் பேணப்படுகின்றமையால் குறிப்பிட்ட ஒரு நபர் தொடர்பான விடயங்களை மீட்டுவது மிகவும் இலகுவாக அமைந்துள்ளது. மேலும் குறித்த காலப்பகுதியில் இடம் பெற்ற நடவடிக்கைளுடன் தொடர்பான விடயங்களை மீட்டுவதற்கு ஏற்ற வகையில் மாதாந்த நடவடிக்கைகள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பதிவுகள் பேணப்படாத காலப்பகுதியில் எதிர்க்கொள்ளப்பட்ட நடைமுறைச்சிக்கல்கள் இன்று தவிர்க்கப்பட்டுள்ளது. ஆவணப்படுத்தல் விடயத்தில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் கோடிட்டுக் காட்டப்படவேண்டியவையே ஆகும்.

அலுவலர் பதவணியினருக்கான முறையான ஆசன ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் முறையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவை ஆவணப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றன. இதன் முலம் அலுவலக நிர்வாகம் முறைமைப்படுத்தப்பட்டுள்ளது.எனவே பௌதீக வளங்கள் மூலமான இவ்வகையான விருத்திகள் பஞ்ஞாயத்து முறைமையை ஒத்திருந்த ஆரம்பகால காதி நீதிச் சேவைகளில் காணப்பட்ட பாரபட்சங்கள் வேறுபாடுகள் பால்நிலை வன்முறைகள் போன்றவற்றை இழிவளவாக்கி விரும்பத்தகு மாற்றங்கள் அதிகளவில் இடம்பெறுவதற்கு பெரிதும் துணைபுரிந்துள்ளதாக கூறப்படுகிகின்றது. (முகைதீன்.அ. 2015)

சம்மாந்துறை காழி நீதிமன்றமானது அதன் முகாமைத்துவ செலவுகளை ஈடுசெய்துகொள்வதற்கேற்ற வகையில் நிதி வளம் பொருந்தியதாக இல்லை. முகாமைத்துவ செலவுகளை ஈடுசெய்வதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை காழி நீதிமன்றம் எதிர்க்கொள்கின்றது. காழி நீதிபதிக்கான கொடுப்பனவும் முகாமைத்துவ உதவியானர் ஒருவருக்கான கொடுப்பனவும் அரச கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது. காகிதாதிகளுக்கான செலவுகளை காழி நீதிபதி திறத்தவர்களிடமிருந்து அறவிடுகின்ற முத்திரைக் கட்டணங்கள் வாயிலாக ஈடுசெய்கின்றமை புலனாகின்றது. மேலும் நீதவான் நீதிமன்ற அரச உடமையாக மின்சாரமும் நீர் இணைப்பும் காணப்பட்ட சமயம் அதன்மீதான கட்டண செலவுகள் நீதவான் நீதிமன்றத்தின் பொறுப்பிலேயே காணப்பட்டது. சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தின் பின்னர் தற்பொழுது அச்செலவுகள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் கட்டணம் தேக்கமடைந்து காணப்படுகின்றது.

இவற்றிற்கு மேலதிகமாக இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இப் பிரதேசத்தின் பொதுச் சேவை நிறுவனங்கள் காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி வருவது அவதானிக்கத்தக்கது. இவ்வகையில் சம்மாந்துறை பிரதேச செயலகம் மூலம் காத்திரமான பங்களிப்புக்கள்

வழங்கப்படுகின்றன. உளவளத்துணைக்கான சேவை வழங்குவதுடன் மாத்திரம் சுருங்கிவிடாது வாழ்வாதார மேம்பாட்டிற்கு விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றது. காதி நீதிமன்றத்தின் உதவியுடன் அவ்வாறான நபர்கள் இனங்காணப்படுகின்றனர். மேலும் சிறுவர் நலன் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள், செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது. அது மாத்திரமல்லாது சம்மாந்துறை நீதவான் நீதிமன்றத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை காழி நீதிமன்ற அலுவலர்களுடனான சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்கள், நீதிவான் நீதிமன்ற நீதிபதியால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் போது காதி நீதிமன்ற மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் பெறப்படுகின்றன. இது சிறந்த அறிவு, மற்றும் அனுபவப் பரிமாற்றத்திற்கான வழியாகும்.இவ்வாறான ஒழுங்குகள் காதி நீதிமன்றத்திற்கு முறையான நிறுவன தோற்றப்பாட்டினை பெற்றுக் கொடுக்கின்றது.

## முடிவுரை

அம்பாறை பிரதேசத்தில் பிரதான ஊர்களில் ஒன்றான சம்மாந்துறை 1935 முதல் காழி நீதிமன்ற செயற்பாட்டடைக் கொண்டது. காலபரிமானத்திற்கு ஏற்ப காழி நீதி முறமை முகாமைத்துவம் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. பதவணி ,பௌதீக வசதி, நிர்வாக ஒழுங்கு, நிதி முகாமைத்துவம் என அது பரிணமிக்கின்றது.பாரம்பரியமான காழி நீதிபதி நியமனம் மாற்றமடைந்து கல்வியும் தகைமையும் திறமையும் கொண்டவர்கள் இப் பதவிக்கு உள்வாங்கப்பட்டமை காழி நீதி மன்ற நிலை மாற்றத்திற்கு வழிகோலி இருக்க வேண்டும். ஆயினும் நீதி பரிபாலனத்தில் காழி நீதிமன்றத்தின் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கான இடைவெளிகள் இல்லாமல் இல்லை.

## References

Farouque.H.M.Z.(1986).Islamic Law in Sri Lanka. A Historical Survey with Particular Reference to Matrimonial Laws. In M.A.M Shukry (Ed.), *Muslims of Sri Lanka Avenues to Antiquity*. (PP ,338-339). Beruwala: Jamiah Naleemiya Institute.

M.I.MJazeel, & Fowzul, M. B. (2014). Dispensing Justice: Court System in Islam from Historical Perspective. Paper presented at the 4th International Symposium 2014 on Emerging Trends & Challanges on Sustianable Development South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka.

Kodikara, Chulani.(1999).*Muslim Family Law in Sri Lanka: Theory, Practice and Issues of Concern to Women*, Kirulappana: Muslim Women Research and action Forum./ Women Living Under Muslim Law.

Marsoof,Saleem.(2001). *The Quazi Court System in Sri Lanka and it's impacts on Muslim Women*.Kirulappana: Muslim Women Research and Action Forum.

Shukry.M.A.M.(1986).Muslims of Sri Lanka – A Cultural Perspective. in M.A.M Shukry (Ed.), *Muslims of Sri Lanka Avenues to Antiquity*. (PP ,385-388), Beruwala Sri Lanka: Jamiah Naleemiya Institute.

மக்கி முஹம்மட்.(2011).*காதி நீதிபதிகளுக்கான ஒழுக்காற்று விதிகள்*,முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

Weerasooria, W. (2014). Towards One World: Memoirs of Judge C.G. Weeramantry, *The Island*.

ஆண்டறிக்கை. 2015 பிரதேச செயலகம் சம்மாந்துறை.

பட்டறை.2009. *சம்மாந்துறையின் வரலாறும் அதன் தனித்துவமான நிர்வாக அமைப்பும்*.சம்மாந்துறைப் பிரதேச சாகித்திய கலாசார விழா நினைவு மலர்.

ஹஸனா,ஷேகு இஸ்ஸதீன். (2015). *இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சம நீதி : முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டமும் இஸ்லாமிய சட்டமும்.* இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாலர் மன்றம்.

வகீஉ. (918). *அஹ்பார் அல் குழாத்,*பாகம் 2, லெபனான்: ஆலமுல் குதுப்.

ஜப்பார்.எஸ்.எம்.ஏ (2014).*இலங்கை முஸ்லிம் தனியாள் சட்டச் சீர்திருத்தங்களின் வரலாறு* முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, உரிமைகளையும் வெளிகளையும் கோரும் முஸ்லிம் பெண்கள் இலங்கையில் முஸ்லிம் தனியாள் சட்டச் சீர்திருத்தத்திற்கான செயற்பாட்டியக்கம்.

குல் பேகம்.சபானா, மக்கீ.ஏ.எம்.எம்(2014). *முஸ்லிம் தனியாள் சட்டச் சீர்திருத்தங்கள் தொடர்பான சுயாதீனக் குழு.*முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, உரிமைகளையும் வெளிகளையும் கோரும் முஸ்லிம் பெண்கள் இலங்கையில் முஸ்லிம் தனியாள் சட்டச் சீர்திருத்தத்திற்கான செயற்பாட்டியக்கம்.

முகைதீன், எம்.ஐ.ஏ. (2015). காழி நீதிமன்ற பரிபாலனம். நேர்காணல், மார்ச் 16.